டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டு அரியலூர் அரசு கல்லூரி அறிவிக்கப்பட்டது. தற்காலிகமாக கூரை வேய்ந்த கொட்டகைகளில் தான் தற்போது வகுப்புகள் நடந்து வருகின்றன. கடந்த 25 ஆண்டுகளாக இந்த கல்லூரிக்கு நிரந்தரமாகக் கட்டிட வசதி ஏதும் கிடையாது. பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க முடியாவிட்டாலும் அட்லீஸ்ட் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தர கட்டிடம் அந்தக் கல்லூரிக்கு உருவாக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி புதிய கட்டிடம் கட்டுகிற பிரச்சினையை அரசு பரிசீலிக்கிறபோது அரியலூர் கல்லூரியினுடைய தேவையை நாங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 384, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

384—

ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமனம்.

*10383— திரு. கே. ஆர். முருகானந்தம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆரம்பப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமிக்கும் செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. தொடக்கப் பள்ளிகளில் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ''இசை'' ஒரு பாடமாகவோ அல்லது தேர்வுக்குரியதாகவோ அங்கீகரிக்கப் படவில்லை. எனவே ''இசை ஆசிரியர்'' நியமனம் செய்ய வேண்டிய தேவையில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே இசை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

1993 ஏப்ரல் 19]

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்த்தாய் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் ஆட்சியிலே தமிழ் வளர்ச்சியிலே பல சிறப்புகளை பெற்றிருக்கிற நிலையிலே முத் தமிழ்களில் ஒன்றான இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிற வகை யிலே கிராமப்புற மக்களுடைய அந்த இசையில் மக்கள் மிகவும் நாட்டம் கொண்டிருக்கிற காரணத்தாலே மாவட்டங்களிலே சில பள்ளிகளிலே கிராமப் பகுதிகளிலே இருக்கிற ஆரம்பப்பள்ளி களிலாவது அந்த இசை ஆசிரியர்களை பகுதி நேர ஆசிரியர் களாக நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இசை சொல்லித் தரப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. இது தேவையான ஒன்றுதான். ஆனால் இப்போது இருக்கிற நிதி ஆதாரத்தில் அப்படி ஒரு புதிய முயற்சியை எழுப்புகிற சூழ்நிலை இல்லை. நிதி ஆதாரம் சரியாகிற நேரத்தில் அந்த யோசனையானது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண் பார்வையற்ற பலர் இசை ஆசிரியர் பயிற்சி முடித்து வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள். இவர் களுடைய ஊனம் கருதி இவர்களை சிறப்பு நேர்வாகக் கருதி, மனு செய்கின்ற அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இசை ஆசிரியர்களை நாம் வேலைக்கு எடுக்கின்ற போது இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை நாம் ஒதுக்கித்தான் எடுத்துக் கொண்டிருக்கி றோம். அந்தச் சூழ்நிலையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு நாம் ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்திய மூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகரங்களில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளி களில் படிப்பவர்களானாலும் சரி, உயர்நிலைப்பள்ளிகளில்

படிப்பவர்களானாலும் சரி, அவர்களுக்கு இசை, நடனம் போன்ற ஆர்வம் உள்ள கலையில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நகர் அல்லாத கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் படிக்கின்றவர்கள், அந்த இசையிலோ அல்லது நடனத்திலோ ஆர்வம் உள்ளவர்கள், திறமை உள்ளவர்கள் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு வசதி இல்லை. நிதிநிலை சரியில்லை என்று சொன்னால் கூட இதனை ஒரு விருப்பப் பாடமாக ஏற்று அதற்கு கட்டணம் செலுத்தித்தான் பயில வேண்டும் என்ற வகையில் நடன ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் போன்றவர்களை கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் நியமனம் செய்ய அரசு முன்வருமா? அப்படிச் செய்தால் நிறைய பேர் தங்களுடைய திறமையைப் பயன்படுத்தி முன்னுக்கு வர வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் எல்லாம் இலவசமாகக் கல்வியைத் தந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், நாம் ஒரு பாடத்திற்காக பணம் வாங்கி அந்த இலவச கல்வி இல்லை என்ற நிலைமையை நாம் உருவாக்க வேண்டியதில்லை. ஆனால் நாமே இசை ஆசிரியர்களைப் போடுவதற்கான சூழ்நிலை வருகின்றபோது அந்த வாய்ப்பை அந்தக் குழந்தைகளுக்கு நாம் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினர் ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இசை ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றால் அவர்களுக்குத் தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இசை என்பது தமிழகத்திலே தமிழ் மக்களுக்கு ஒரு கலாச்சாரத்தினுடைய முன்னோடியாக இருக்கின்ற காரணத்தினால் தனியார் பள்ளிகளிலாவது—அதாவது வசதி படைத்த தனியார் பள்ளிகளிலாவது அந்த இசை ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் விருப்பப்பட்டு படிக்கின்ற விதத்திலே அவர்கள் இசை ஆசிரியரையோ, நடன ஆசிரியரையோ அவர்கள் வேலைக்கு அமர்த்திச் சொல்லித் தருவதிலே இப்போது தடை ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

1993 ஏப்ரல் 19]

திருமதி ஜீனத் சர்புதீன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் பள்ளிகளில் மட்டுமாவது இசை நாடகத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்களை அமர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே இத்தகைய வாய்ப்புகள் தரப்பட்டு வருகின்றன. இப்போது ஆரம்பப் பள்ளிகளிலேயும் இத்தகைய வாய்ப்பு வேண்டும் என்று கேட்கின்ற போது இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே அது முடியவில்லை என்கிற பதிலைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் இசை நடனம் போன்றவற்றைச் சொல்லித்தர வேண்டும் என்கிற கருத்தை அரசு வரவேற்கிறது. அதை ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மேலை நாடுகளிலே கிராமத்திய இசைக்கு பெரும் மரியாதை இருப்பதை கண்கூடாகக் காண்கின்றோம். அது போலவே கிராமங்களிலே இருக்கின்ற அந்த கிராம இசையைப் பாடுகின்றவர்களைக் கருத்திலே கொண்டு அங்கே தேர்வு செய்து அந்த கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளிலே அரசு நியமித்து, அந்த கிராஃப்ட் டீச்சரைப் போல அவர்களையும் பார்ட் டைமாக எடுத்து, அவர்களை ஊக்குவித்து, அந்த மாணவர்களுக்கும் இசையைக் கற்பித்துக் கொடுக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யோசனையை நான் வரவேற்கிறேன். குறித்த காலத்திலே அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கர்நாடக இசையை எப்படி பள்ளிகளிலே ஆசிரியர்களைப் போட்டு சொல்லிக் கொடுக்கின்றார்களோ அதைப் போல கர்நாடகத்தையும் சினிமாத் துறையையும் சேர்த்து ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சினிமா இசையை நாம் சொல்லித் தர வேண்டியதில்லை. அவர்களே அதைப் பாடிப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 385, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

385—

மங்கலம்பேட்டை பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி.

*9497—திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, மங்கலம்பேட்டை பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் தொகுதி, மங்கலம்பேட்டை பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்கனவே ஆறு படுக்கைகள் இருக்கின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மங்கலம்பேட்டை பேரூராட்சியின் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் உள்ளன. பொதுமக்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்கிலே ஆரம்ப சுகாதார நிலையத்திலே மருத்துவ சிகிச்சை பெற வருகை தருகிறார்கள். அப்படி வருகை தருகின்றவர்கள் புற நோயாளிகளாகவே மருத்துவச் சிகிச்சைபெற்று செல்லவேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. உள் நோயாளிகளாக மருத்துவ சிகிச்சைப் பெற வருகின்ற போது அங்கே போதிய படுக்கை வசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் அந்த நோயாளிகள் எல்லாம் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டைக்கு அருகில் உள்ள விருத்தாசலம் நகரத்தில் இருக்கின்ற அரசு